2023 மார்ச் 30]

பார்த்து, தொடர்பு கொண்டு பேசி, அந்த 11% import duty*-ஐ நீக்கியதும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை நல்ல கோரிக்கைதான். அதில் ஒன்றும் சந்தேகமே கிடையாது. நம்முடைய மொத்த தேவை 120 இலட்சம் பேல்கள். ஆனால், தமிழ்நாட்டில் இதற்கு முன்னர் 5 இலட்சம் பேல்கள்தான் விவசாயிகள்மூலம் தயாராகி வந்தன. இப்போது அது* increase *ஆகி, கிட்டத்தட்ட 15 இலட்சத்திற்கு வந்திருக்கிறது. 7 இலட்சம் பேல்கள்* import *செய்கிறோம். சுமார் 100 இலட்சம் பேல்கள் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி,* CCI *போன்ற அமைப்புகள் தேவை. தமிழ்நாட்டில் பஞ்சு பேல்களை தங்குதடையின்றி விநியோகம் செய்வதற்கு, தனியார் நூற்பாலை பிரதிநிதிகளும்* SIMA-Southern India Mills' Association *என்ற கூட்டமைப்பும், கூட்டுறவு நூற்பாலை பிரதிநிதிகளும் சேர்ந்து* Public-Private Partnership model*-ல் தமிழ்நாடு பருத்திக் கழகம் என்ற பெயரில் ஆரம்பித்தோம் என்றால், நிச்சயமாக அது நன்றாக இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் ஆலோசித்து நிச்சயமாக அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு.* N. *அசோக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

பேருந்து வசதி

***52655—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 மார்ச் 30

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்குவதற்கான திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், எங்களது எதிர்காலம் இளைய தளபதியை வணங்குகிறேன்.*

பேராவூரணியிலிருந்து திருப்பதிக்குச் செல்ல தஞ்சை, புதுக்கோட்டை மற்றும் திருச்சி போன்ற நகரங்களுக்குச் சென்று, பின்பு அங்கிருந்து பேருந்துகள் மூலமாக திருப்பதிக்குச் செல்கின்றோம். எனவே, பேராவூரணி தொகுதி மக்களின் சிரமத்தைப் போக்கும்விதமாக, பேராவூரணியிலிருந்து திருப்பதிக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க, மறுபரிசீலனை செய்து, அரசு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அசோக்குமார் அவர்களின் கோரிக்கையை, அவருடைய பகுதி மக்களுடைய கோரிக்கையாக வைக்கிறார். ஆனால், பேராவூரணியிலிருந்து 23 கி.மீ. தொலைவில்தான் பட்டுக்கோட்டை இருக்கிறது. பட்டுக்கோட்டையிலிருந்து ஏற்கெனவே, தினசரி ஒரு பேருந்து திருப்பதிக்கு இயக்கப்படுகிறது. அதற்கு முன்பதிவு செய்வதற்கு online வசதியும் உள்ளது. எனவே, அண்ணன் அசோக்குமார் அவர்கள் online மூலமாகப் பதிவு செய்துகொண்டு, 23 கி.மீ. பயணம் செய்தால் பட்டுக்கோட்டையிலிருந்து நேரடி பேருந்தில் திருப்பதிக்கு பயணிக்கலாம் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைகோடி பகுதியானது, எங்கள் பேராவூரணி தொகுதி. பேராவூரணி அரசு பேருந்து பணிமனையிலிருந்து மாவட்ட தலைநகர் தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி போன்ற நகரங்களுக்கு பேருந்து வசதி கிடையாது. மேலும், இரவு 8 மணிக்குமேல் வெளியூரிலிருந்து வருபவர்கள், பேராவூரணிக்கு வந்தடைய பேருந்துகள் இயக்கப்படவில்லை. எனவே, புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதிக்குப் பேருந்து இல்லை என்றவுடன், இன்னும் கூடுதலாகப் பேருந்து வசதியைக் கேட்கிறார். எனவே, முதலில் திருப்பதி பிரச்சினையை முடித்துவிடுகிறோம். திருப்பதிக்கு பட்டுக்கோட்டையிலிருந்து இயக்குகின்ற பேருந்தை பேராவூரணி வரை நீட்டிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். அதேநேரத்தில் பட்டுக்கோட்டைக்குத் தேவையான எண்ணிக்கையில்* seat *வசதிகளையும், முன்பதிவுக்கான ஏற்பாடுகளையும் செய்து, அந்தப் பேருந்து இயக்கப்படும். இந்த புதிய வழித் தடங்கள் குறித்து, புதிய பேருந்துகள் வந்தபிறகுதான், நடவடிக்கை எடுக்க இயலும். ஏற்கெனவே, ஒன்றிய அரசு 15 ஆண்டுகாலம் இயங்கிய பேருந்துகளை* scrap *செய்ய வேண்டுமென்ற ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதுபோக, மீதியிருக்கின்ற பேருந்துகளை புதிய வழித்தடத்தில் இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*